

# மரண சிந்தனையின் மர்மம்

[illegible]க்தியோர்,
[illegible]ள வடிவிற்கடிகள்
சித்ராமுத்து,
அருளொளி மடம்,
அழகன்குளம்

8351

# மரண சிந்தனையின்

## மர்மம்.

THE MADURA

அருளொளி மட வெளியீடு.

விக்ருதி ௵ ஆணி மாதம் 28௳

(12-7-50)

ஆக்கியோர்,

ஸ்ரீமத் சித்ரமுத்து அடிகள்,

அருளொளி மடம்,

அழகங்குளம்,

இராமநாதபுரம் ஜில்லா.

காபிரைட்] [விலை, அணா, ஆறு.

# முகவுரை

ஆண்டவன் படைப்பில் மேம்பட்ட மனிதரினம் சரி நிகர் சமானமென்ற உயர்நோக்கின்றி, சாதிமதச் சச்சரவுகளில் வீண்காலம் செலுத்தி பிறப்பிலே பேதங் கருதும் மிலேச்சக் குணம் மிகுந்து, இவற்றிற்கிடையே எல்லாம் வல்ல அன்னை பராசக்தியின் திருவருள் மறந்து, அகங்காரப்பித்து தலைக் கேறி தீச்செயல் பல புரிந்து, அதனால் உலகில் அதர்மம் மேலிட்டு, பாவச்சுமை சூழ்ந்து படுகுழியை நாடிச் செல்லும் இத்தருணத்தில். தவநிலைபற்றி நல்வழி நடந்து பேரருள் பெற்றுக் கிடைத்தற்கரிய மக்கள் கடைத்தேற வேண்டிக் கடமை என்கின்ற பணியாற்றத் துணிந்த மெய்யடியார்களில், அடியேனுமொரு அணுமாத்திரக் கடனாற்றத் துணிந்து, மன மௌனமுற்ற காலங்களில். இதயகமலத்திலிருந்து உதயமாகிய வாக்குகளைச் சிறிது தொகுத்தெழுதிப் புத்தக ரூபமாக வெளியிட்டுள்ளோம்.

சமூகசேவா உணர்வுற்று ஒழுக்கத்திற் சிறந்த பேரறிஞர்களும், பொதுவாக மனிதர்குலமும், இந்நூலிற் காணும் கருத்துக்களை மனதிற் பதித்து உண்மையை ஆழ்ந்து சுவைத்து அலசிப்பார்த்து உயர்வெய்தினால் அதுவே யாமடைந்த பேரானந்தமாகும்!

மேலும், பல தத்துவார்த்த உண்மைகளைப் படித்துத் தெளிவுற வேண்டுமென்கின்ற அன்பர்களின் ஆர்வப் பெருக்கும் மேலிடுமாயின். இன்னும் பல அரிய நூற்களை வெளியிட்டு பணியாற்றுவதற்கு அடியேனுக் கிடைவிடாத அருந்துணையாக நிற்கும்.

வணக்கம்.

இங்ஙனம்,

அடியேன், சித்ரமுத்து.

# மதிப்புரை

தோற்றமுள்ள அனைத்தும் ஒன்று பலவாகி மரணம் எனும் ஒரே உறுதிப் பொருளையே அடைகின்றன. மரணத்தின் மர்மத்தை உன்னி ஆராயும் மக்கள் இன்ப துன்பங்களைச் சார்ந்துநிற்கும் எல்லாவிதமான அச்சத்திற்கும் அப்பாற் சென்று பேரின்பப் பெருவாழ்வினை எய்துகின்றனர். இவ் வுண்மைக்கு புத்தர்பெருமான், பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷி போன்ற மஹா உத்தமர்கள் எடுத்துக்காட்டாக வுள்ளனர்.

சநாதன தர்ம மஹான்கள், கிறிஸ்தவ ஞானிகள், பௌத்தப் பெரியோர், இஸ்லாமிய ஸூபிகள், முதலியோர் வற்புறுத்தியுள்ளபடி **"மரண சிந்தனையின் மர்மம்"** எனும் பெயரிய இச் சிறுநூல் முமுட்சுத்துவ வழி நிற்போருக்குச் சாலப் பயன்படுமென நம்புகின்றோம்.

இந்நூலின்கண் உள்ள ஒவ்வொரு வாக்கியமும் ஆழமான கருத்தினைக்கொண்டது, தியானத்திற்குரியது. இதனைத் திருவாய் மலர்ந்தருளிய மஹா புருஷருக்கு எமது வணக்கம். இதனைத் தொகுத்துள்ள அவரது சிஷ்யசிலருக்கு எமது பாராட்டு.

ஓம் தத்ஸத்

விதேயன் சுவாமி,
சத்யானந்தா.

விவேகானந்த ஆச்ரமம்,
கோலாலம்பூர்.
8-5-1950

R6

# நன்றி

[கவி]

அருட்பணி பலதுசெய்து அரனடி சார்ந்தஞ்ஞானக்
கருக்குழி யணுகாதுள்ளக் கருணைபெற் றுயர்மெய்ஞான
விருப்புள்ள ராஜமும் விண்ணோரகமகிழ் மாணிக்கமும்
திருச்சிமா நகரிலென்றும் திருவருள் பெருகி வாழ்க!

இகபரவாழ்வில் இன்பம் விரும்பி நிற்கும் இணையற்ற ஜீவன்களுக்கு இறுதி முடிவான மரண ஜோதியின் மகத்துவத்தை அடியேன் நெடுநாளாக ஊன்றி ஆராய்ந்து பார்க்குங்கால், உள்ளத்திலிருந்து உதயமாகிய உண்மை உபதேசங்களை நமது மனதிற்கு அறிவுறுத்தியதோடு பலர்க்குபகாரமாகும் பொருட்டும் அவ்வப்போது ஏட்டுப் பிரதிகளில் பொதிந்து வைத்துள்ளோம். அப் பிரதியைக் கண்ணுற்று அகமகிழ்ந்த சிவநேயச் செல்வர்களில் திருச்சிமாநகரில் வதியும் மெய்யன்புடைய திருவளர், கு. ராஜம், கு. மாணிக்கமும் இவ்விருகுணசீலர்களும் தயங்காது போதிய பொருளீடு செய்து அச்சிட்டு மக்கட்குதவ முன்வந்தமைக்கும், மேலும் அறப்பணிகளாற்றத் துணிந்தமைக்கும் நமது இதய பரிபூரண ஆசியை சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்,
அருள்வடிவிற் கடியேன்,
சித்ரமுத்து.



அருள்வடிவிற் கடிகள்
ஸ்ரீமத் சித்ரமுத்து

உலககுரு ஒருவ னிறைவன் அவனருளால்
பலபொருளும் பாரி லுள.

*

# மரண சிந்தனையின்

## மர்மம்

அறிவும் மனதும் போராடி இறுதியில் வஞ்சப்புலி போன்ற கொடிய நெஞ்சைத்திருத்தி நமது மரண சிந்தனையிலுதித்த மணிமொழிகளுக்கு மறுமொழி பகரப் பணித்துள்ளோம். 1

பிறவியிலுயரிய மனிதன், தன்னையறிய மறந்து மாராட்டச்சுழலில் சிக்கி உழல்வதின் காரணம் யாதென உள்ளாழ்ந்து சிந்திப்பவர்கள் தற்கால உலகரீதியில் மிகுதியும் குறைவு. 2

இம்மாயா உலகில் ஆட்சி புரிந்து அதிகாரச்சட்டங்களைப் பிரயோகித்து வியவகார விசாரணை செய்து, அநித்தியப் பொருள்களை அறியாமையால் நித்திய மெனக்கருதிச் சூழ்ச்சி வலையுள் கட்டுண்டு முடிவில் மடிந்தழிகின்ற இவ்வுடலினுள் நின்றொளிர்வது அறிவா, மனமா? என ஆராய்ந்து பார்ப்பவர்கள் ஒருசில உள்ளத்துறவுடையவர்களேயாகும். 3

புறத்தோற்றத்தையும் பொய்யுருவங்களையும் ஊனவிழியாற்கண்டு களிப்புற்று எனதில்லம், எனது மனையாள் மக்களென மனப்பற்றுடையோனாகி, சதா சஞ்சலக் கடலிலிறங்கிக் கரையேறவும் வழியறியாமல், கவலையாகிய முதலையின் வாயிலகப்பட்டுப்பிராணனைப் பறிகொடுக்குந் தறுவாயில் மனிதன் பிரலாப மடைகிறான்! 4

காரணம் யாதென அகவிழி திறந்து ஆராயப்புகின் அண்மையில் உண்மை புலப்படுவது எளிது. இவையல்லாது இக விழியும் எனதெனக் கொள்ளும் செருக்கும் சூழ்ந்து உலகை நம்பி, ஏமாந்து போகிற மந்த மதியும் மழுங்கிய அறிவும் பந்தபாசப்படுகுழியில் தள்ளி விட வேண்டுமென்ற சிந்தனையும் எதிர் நின்று போராடுவதினால் மனிதனுக்கு அகக்கண் திறப்பது அரிதாகின்றது. 5

அளவு கடந்த ஞான போதனா நூற்கள் நம் தேசத்தில் உதயமாகியும் ஆன்ம ஞானிகள் அருகிலிருந்து செவ்விய அருள் மொழிகளைச் செவியுணவாகப் புகட்டினும் காட்டில் பிரகாசித்த மதி போலும், கடலில் பெய்த மழை போலும் நன் மதிகள் யாவும் காணாதொழிகின்றன. 6

மேலும், நாட்டுப் பணிபுரியப் பிறந்த மாந்தர்கள் காட்டு மாக்கள் போன்று காட்சியளிப்பதைக் காணுங்கால், காலச்சக்கரச் சுழலில் மக்கள் வீழக் கிடக்கின்றனரென்ற அறி குறியே யல்லாது மற்றன்று! இதைச் சாதாரண மனிதர்கள் அறிவதென்றாலரிது. ஏனெனில், அவர்களுக்கு மரண மறதி அதிக முண்டென்பதைக் குறிக்கின்றது. 7

வேதாந்த தத்துவ வித்தைகளைக் கற்றுக் கடைத்தேறக்கருதிய பேரறிஞர்களுங் கூடக் கட்டுக்கதைகளைக் காண விழைகின்றனர். இதுவும் மரணத்தை மறந்த மதியீனமே. 8

ஒவ்வொருவரும், சதா இவ்வுருவ உலகைச் சற்று உற்று நோக்கி உடலையும் பன்முறை பகுத்துப் பார்ப்பின் உறுப்பினுள்ள விருப்பும், உண்மையை உண்டில்லை யென்ற விபரீதமும் உடலோடு உயிர் சார்ந்தாற்றும் பொறுப்பும், தெற்றெனத் தெளியலாகும். 9

கற்பாசயப் பையில் கட்டுண்டு சுக்கில சுரோணிதம் திரண்டு உருவாகி உயிர் குடி புகுந்து புவியில் பிறந்து புனைப் பெயரும் பெற்று பிள்ளைப்பருவமாய் வளருமென எதிர்பார்ப்பது யாருக்கும் சந்தேகமே. 10

ஆனால், இயற்கையுலகில் அமைப்போடு தோன்றிக் கண்கண்ட பொருள்கள் யாவுமொரு நாள் அழிந்தொழியுமென உறுதியாக மரணசாசனமெழுதி வைத்து விடலாம். இதுதான்நிச்சயம். 11

ஆதலால், மரணத்தை மறந்து விடலாகாதென மாயா விநோத மனதிற்கு பின்வருமாறு பல நற்போதனைகள் புரிந்து நாம் எச்சரிக்கின்றோம். 12

ஏ நெஞ்சமே! வீதிகளில் வெகு விநோதமாக நடமாடுகின்ற ஆண் பெண்ணுடலை நீ கவனிக்கையில் அங்க லட்சணத்தோடு, அவலட்சணத்தையும் கலந்தே காண்கின்றாயல்லவா? அவை யாவும் மங்களமாக நிலைத்து நிற்பதா, அல்லது மாயையா? எனக்காண்பதும், உனது மரண சிந்தனையிலேதான் மறைந்து கிடக்கின்றது, ஆழ்ந்து பார் உண்மை விளங்கும். 13

**பி**றவிப் பிணியைப் போக்க மருந்து உன்னை யுணர்தலேயாகும். கோடிக்கணக்கில் தனந்தேடிப் புதைத்து வைத்து மடிகின்ற மானிடர்களேயும் நீ நன்கு கவனித்து எக்காரியங்களேயும் நிதானித்துச்செய். நலனுறலாம். 14

**உ**ன்னை நீ யறிந்து கொள்ளாத வரையில், உலக விஷயங்களைப்பற்றி பிதற்று வதினுல் யாதொரு பயனும் பெற்றுய்ய முடியாது போம். ஆதலால், புகழிகழற்ற நிலையிலிரு அப்படியாயின் ஆனந்தமுடன் திகழப்படுவாய். 15.

**ம**னமே! பிறரைக் குறை கூற விரும்பிய நீ, உன் குறைகளைச் சற்றெண்ணிப்பார். அறியாமை யொழியும், அச்சம் பிறக்கும், அன்புருவாகி விடுவாய். இதில் ஐயமில்லை. 16

**பா**ய் விரித்தோடும் மரக்கலம் போன்று, இந்த மானிடப்படகை திசை காணுக்கடலில் மன வேகமாகிய நீ காற்று உருவமாக இழுத்துச்செல்லும் போது பிரயாணியாகிய ஜீவன் படும்பாடு கொஞ்சமா? அவை கண்டு, அறிவுமயமாகிய மாலுமி மதி என்னும் சுக்கானைத்திருப்பிப் பக்குவமாக படகைக் கரை சேர்க்கா விட்டால் அதோகதி யென்னும் ஆழிய கடலில் மூழ்கி விடச்செய்வாயல்லவா? கிருபை செய்து சிறிது அமைதியாக இரு!! 17

**இ**ம்மகி தலத்தில் தோன்றி மறையும் எவற்றிலும் மதிப்பிட வொண்ணுத மாணிக்கம் யாதென நம்மிடம் கேட்கப்பெறுமாயின், அவை மரணமென்ற மெய்ப்பொருளொன்றெனவே சுட்டிக்காட்டுவோம். 18

சாவையும் வாழ்வையும் சீர்தூக்கிப் பார்க்கின் சாவுமணி யோசையே சாலச் சிறந்ததெனத் தென்படும். ஆதலால், சாவைப்பரிசெனக் கொள்ளலே சான்றோர்க்கழகு சாவுதான் உலகுயிர் தழைக்கச்சிறந்த வித்து, மறந்து விடாதே. 19

உனது யாக்கையின் அமைப்பைக்கவனி. ரோமம், தோல், தசை, இரத்தம், நரம்பு, எலும்பு, மூளை, இதயம், கால், கரம, சிரமென அமைந்தஉறுப்புக்கள் யாவும் வேறு பட்டதின் காரணங்களையும் சிறிது சிந்தனை செய். 20

இவ்வுடலையும் உலகையும் நீ, சதமெனக்கருதாதே. உற்றார் உறவினர்களையும் சொந்தம் பாராட்டாதே. இவைகளனைத் தும் நித்திய வாழ்விற்கு சத்துருக்களெனக் கருதி அகற்று. 21

நாமேன் அப்படிச்சொல்கின்றோம் தெரியுமா? உனது கால்களில் நோயுண்டானால் கண்களிலிருந்து கண் ணீர் வருகின்றதே, கண்களுக்கிடையூறு நேர்ந்தால் கால்கள் ஏதேனும் கலக்கமடைகின்றதா? இவ்வாறுதான் உனது பந்தப்பிணைப்புள்ள யாவும் ஒரு நாள் தொடர்பற்றுப்போய் விடுமெனச் சொல்கின்றோம். 22

நெஞ்சே! தோட்டி முதல் தொண்டமான் வரை ஆண்டிமுதல் அரசன்வரை, அரிய திருவுரைகளை உபன்யாசம் செய்து வருகின்றாயே, அஃது மெய்மயமாக மேலும் பிரகா சிக்குமா, அல்லதுகற்பனைபோன்று தோன்றிமறையுமா? இவை யுன் கருத்துள்ளெண்ணிக் கவனமுடன் உரையாடப்பழகு. 23

உனக்கு நாமிங்கு சொல்லிவரும் உபதேசங்களைப் பகிரங்கப்பார்வையில் நோக்கிக்கணக்கெடுக்க முடியாது. அக விழி திறந்து அந்தரங்கமாக நோட்டமிட்டுணர்ந்து பார் நன்கு புலப்படும். 24

பந்தபாச வீடாகிய கல்கட்டு மேன்மாடிகளைக் கண்டு களிப்புறுகே! குச்சு வீட்டிற்கும், மச்சு வீட்டிற்கும் வித்தியாசங்கள் யாதெனச் சற்று யோசித்துப் பார். இந்த வீடு சொந்த வீடில்லை யென்பதையும், உந்தன் வீடு உயரிய சூண்ய வீடென்பதையும் கண்டு கொள்ளலாம். 25

இடுக்கியிலகப்பட்ட எலிபோல, பல இன்னல்கள் வந்துறும் போதுதான் உனக்கு ஞானோதயமாகின்றது. மற்றைய நேரங்களில் பற்றுருவாகிய பாழானசுழலில்வீழ்ந்து தத்தளிக்கின்றாய். இதை நடுநிலையாகிய நாம் பாராமலேபார்த்துக் கொண்டுதானிருக்கின்றோம். 26

உனது வாழ்கையின் வரலாறுகள் நீதி தவறி வரம்பு கடந்து போகுமாயின், இறுதி முடிவில் சுருதிக்கணக்கைப்புரட்டிப்பார்த்து தர்ம, அதர்ம சங்கையறிந்து சம்மன் அனுப்பப்படுமே, அதற்கென்ன பதில் சொலவாய்? உஷார் ரென்ற உடைவாளை மறதியாகிய மகாபாவியிடம் ஒப்படைத்துவிடாதே. 27

அளவு கடந்த ஆசை உதயமாகின்றதே, அவை எங்கிருந்து உதிப்பதெனக் கண்டுள்ளாயா? நீ இன்னும் கண்டுபிடிக்கமுயலவில்லை யெனவே கருதுகின்றோம். இவ்விஷயத்தில் முனைந்து ஆராயமுற்படு. இடமறிந்து ஆங்கு அதைநசியச்செய்தால் அநித்திய உலக ஆபாசச்சுழல் உன்னை வந்து அடிக்கடி மோதமாட்டா. 28

ஏ மனமே இவ் வூன உடலைத் தினசரியும் பசிப் பிணியாகிய அரக்கன் பற்றிப் பிடித்தாட்டு கின்றனே. அதற்கும் உயரிய உபாயமுண்டு கேள், சொல்லு கின்றோம். மௌன ஆனந்த கட்டத்திலேயவை காணக்கிடக்கின்றன. கண்டுகொள். 29

"ஏழடுக்கு உப்பரிக்கை மீதிருக்க கனவு கண்ட எனக்கு ஒரு குடிசைவீடு மில்லாது பரிதவிக் கின்றேனே! எனக்கேட்ட உனது ஏழை நண்பனுக்கு, நேற்றென்ன சொல்லி யிருந்தாய், இன்றென்ன சொல்லப் போகின்றாய் நாளைக்கென்ன சொல்லக் கருதுகின்றாய்? விடைபகரு. வீண் காலப்போக் கினிமேல் வேணடாம். 30

கிடைத்ததைப் புசித்துச் சிந்தையை யடக்கிச் சும்மா இருப்பது உனக்கழகல்லவா? செயலற்ற எண்ணங்களை யெண்ணிச் சீரழியலாமா? உழல்நிலையை விட்டு ஒதுங்கி யிருந்தால் நீ, நற்கதியுறலாம். 31

அருட் பிரகாசத் தாய் உனக்கு அமுதப்பாலூட்டி யதை மறந்துவிடலாமா, ஞாபகக் கலசத்தினடியிலே நமது உபதேச மனைத்தும் பிரகாசிக் கின்றதா? அல்லது இல்லிக் குடம்போல் நாம் சொல்லிய தெல்லாம் வீணாகி விடுகின் றனவா? இருதலைக் கொள்ளிக் கரையானுக்கு உனது இருதயத்தை இருப்பிடமாக பரிசளித்து விடாதே; சொன்னோம். 32

நூலேணி வைத்து மேலேறிப்போக வேண்டுமென உனது அகக்கதவைத்தட்டிச் சுகப்பொருளையு முணர்த்தி யுள்ளோம்; அவைகண்டு மது உண்ட வண்டுபோல் சொக்கிடாமல் மகி தலயக்களோடு நீ மயங்குவதேன்? இது உனக்குத் தக்க மதியாகாது. 33

அப்பன் மகனாக இருந்ததை மறந்தானென்றால், மகன் அப்பனாக வருவானென்பதை நீ மறக்கலாமா? சிற்றாடைகளைச் சுற்றித் தெருவீதி களில் ஆடிய காலங்கடந்து பருவ வயது வந்து தொடர்ந்த படியால் அருவ நிலையில் நிற்கத்தவறி விடாதே. 34

சரீர நாற்றத்தைப் போக்க சந்தனாதித் தைலம், எனக்கு வயது இருபத்தைந்தில் வாங்கிப் பூசியுள்ளேன், உயிரைச் சிங்காரிக்க முயன்ற இப்பொழுது உனக்கு வாசனையில் ஆசை கிளம்பக் காரண மென்ன? இவை தகாதென உணர்ந்தகற்றி, தகுவன வற்றைச்செய்ய தயங்கிடாதே!! 35

நெஞ்சே! பத்தாநெம்பர் வீடு முத்தியடையவே நாடு, பிறகனைத்தையும் விட்டுப்போடு, எனும், பேரின்ப நாட்ட முள்ள பெரியார்களுக்கும், சிற்றின்பச் செருக்குள்ள சிறு மதியாளருக்கும் பொன்னுலக வாழ் வெய்தப் போட்டி நடக் கின்றதைக் கண்டு, வெற்றிக்கொடி நாட்டி பேரிகை கொட்டி ஜெயம் பெற்று வீரசுவர்க்க மெய்தப் புறப்படு. 36

இன்று நேற்றென்ற பொருளையறிய அறிவுக்கலப்பை கொண்டு, அகப்பூமியைச் சதா உழுது தேடியும், இருநாளி லொருநாளை யேனுமறியா மலிருக்கின்றோமே யென உனக்குக் கவலை சிறிதேனு முண்டா? இனியேனும், நீ உபசாந்த சமதரி சன நிலையில் நிற்க முற்படு. 37

ஏராளமான செல்வமிருந்தால் தாராளமாக தான மிடலா மெனக் கருதுவது பெரியதவறாக முடியும், உனது அருளைச் சூறையாடிப் பொருளைப் பொய்பேசி யாசிக்க வேண்டி நேரிடும். ஆதலாலுனது அன்புப் பெருக்கால் ஊறிப் பொசியும் அமுத மொழிகளை மக்கட்குப் பங்கிடு செய்து கொடுத்தாலுனக்கு மோசமில்லை. 38

உலகு தோன்றி யொடுங்கும் ரகசியம், நஞ்சிலிருந்து அமுதமும், அமுதத்திலிருந்து நஞ்சும் பிறந்து ஜீவராசிகளை உய்விக்கிறதென நீ யுணர்தல் வேண்டும். அப்படியாயின், பகலிற வென்பனபோல பலபாகு பாடுகளைக் கருத உனக்கிட மிராது. 39

பிழைகாண விழைவதும், பிழை கண்டு பிடிப்பதும், பிழை கூறுவதும் பலருடையசுபாவம், தன்குறை யுணர்வதும் பிறர்குறை காணுதிருப்பதும், பேரறிவுடையோர் சுபாவம், இவையில் மிகை யுணர்ந்து உனது பிழை கண்டு உன்னை நீ திருத்த முயலு. 40

அஞ்ஞானி, விஞ்ஞானி, மெய்ஞானி, தேசாபிமானி யெனப் பெயர்வந்த காரணமும், அவற்றின் இறுதியில் ஞானி யென வந்த ஒலிவடிவையும் எழுத்ததிகாரத்தில் புரட்டிப் பார்த்து உருவ வடிவில் சந்தேகமற்றுவிடின் நீ, அமரருல கிற்காளாகலாம்! 41

மனமே! உனக்கு விவேக மில்லாத படியினுலே வீணுக பந்தபாசத்துள், கட்டுண்டு, ஆசையாகிய அழுக்குத் திரண்டு, கற்பாசயப்பையுள் புகுந்து புவியில்பிறந்து வளர்ந்து வாலிப சேட்டையிலேற்படும் மூர்க்கக் குணத்தை எதிர்க்க முடியாமல் மீண்டும் வந்தவழியைநோக்குகின்றுயே! இவை நீ முன் செய்த தீவினைதானல்லவா? ஐயமகலச் சற்றெண்ணிப் பார். 42

உயர்ந்தமரக் கிளைகளில் உட்காந்திருக்கின்ற பட்சி களை ஒட்டிலகைப்படச் செய்வது போன்று சதா உழல் நிலையில் நின்று, திண்டாடும் உன்னை ஒரு நிலையில் நிறுத்தவேண்டிப் பலமுறையும் நல்லுபதேசம் புரிய நேரிடுகிறது, சரிதானெனக் கேட்டு அதன்படி நடப்பாயாகில் கிருபைவீடு பெற்று பரம பதமடைந்த பாக்கியவான்களில் நீயும் ஒருவராகத் திகழலாம். 43

உனக்குத்துணை நீதானென நாமெத்தனை முறை உபதேசித்தோம். ஏனின்னும் கெட்டழிந்து போகப்பார்க்கின்றாய் பெற்ற பிள்ளையும், உற்றார் உறவினர்களும் உனக்குச் சதமில்லை. யாவரும் கடைசி முடிவில் இடுகாட்டையும் எட்டிப்பாரார்களென்பதையுணர்ந்து பற்றற்றிருக்கப்பழகு. 44

அபரிமிதமான ஜனங்களோடு நாமும், சபரிமலையேறி இறங்கினோம். நீண்ட மரங்களடர்ந்த இருண்ட கானக மல்லாது அங்கு கண்ட அதிசய மொன்று மில்லை. மீண்டும் வனசஞ்சாரம் செல்லத் தூண்டாதே. ஓடித்தவஞ் செய்வது பேடித்தன மெனக் கருது. 45

அண்டினபேர்களைக்கெடுத்து அவமோசம் புரிகின்ற நவநாகரீக இக் கலியுலகத்திலே, தவஞான வழிகளையறிய எவரேனு மோடி வருவார்களா? ஈசைமதியுடன் கூவியழைப்பதை நிறுத்திச் சும்மாயிரு சுகம் பெறலாம். 46

கடமையாகிய கரும யோகத்தை பந்த முறுது செய்து முடித்தவன், ஞான யோகத்திற்கு அதிகாரி யெனக் கூறும் சுருதி முடிவின் சூட்சமம் யாதென நீ அறிந்திருக்கின்றாயா? அப்படி யறிந்திருப்பாயானால் உரிமையைக்கருதாது கடமையிலோங்கிப் பிரகாசிக்க வேண்டுமே உனக்கின்னும் மௌட்டீக முண்டெனக் காணப் படுகிறது. இனி யேனும் மகத்துவ மிக்கப் புகழுடம் பெய்தப்புறப்படு. 47

சாரும் சக்கையும் கலந்து அமைந்துள்ள கரும்பைப் போல நீரும் சேறும் சேர்ந்திருப்பதைப் புசிக்க நீ ஏன் விரும்புகின்ற தில்லை? இவை யுனது ஜென்ம வாசனையா, அல்லது செயற்கை வாசனையா? உத்தமர்களோடு உறவுபூண்டு உண்மையை நாட விரும்பு. 48

நீ உண்ணும் உணவுக் கேற்றவாறு எண்ணமும் குணமும் அமையுமென அறுசுவை யிச்சையை விளக்கினாலும் உனதகக் குரங்கின் ஆட்டம் அடங்கின பாடில்லையே ஏன் உனதுள் அழுக்கிருப்பதினால் தானே! இதை அவசியம் நீ ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும் மறைக்கலாகாது. 49

ஏ மனமே! அடுத்துக் குடும்பத்தைக் கெடுத்த சந்நியாசியையும் பணத்தைக் கொடுத்து பரதேசி யாக்கிய பாமரக் குடும்பஸ்தரையும் நீ நன்கு அறிந்திருந்தும் ஒருவரை யொருவர் உயர்வு தாழ்வெனக் கருதலாமா? யோசித்துப்பார் உண்மை விளங்கும், நன்மைபயக்கும். 50

அறிவிலிருந்து ஆனந்தமும், மகிதல இச்சையி லிருந்து மாயப் பிரபஞ்சமும் தோன்றுவது கண்டு அருள் மயமாகி நிற்கக் கருதுகிற மனிதனைக் காரண காரிய முணர வொட்டாமல் தடுத்துக் கடை கெட்ட படுகுழியில் தள்ளி விட நீ எத்தனிப்பது தகுதியாகுமா? இனியவ்வாறில்லாது அரிய தவம் புரிபவர்களுக்கு உரிய துணையாக நிற்பாயாக! 51

ஆழக் கிணற்றினுள் நீளக் கயிறில்லாமல் ஜலமெடுத்துத் தாகந் தணிக்க முடியாதவாறுபோல் அறியாமையிருள் சூழ்ந்துள்ள மக்களுள் உயர்ஞானப் பெருமையை உணர்வார்களென்று நீ கருதுகின்றாய்? அது பொய்யாய் முடியும். உனது உபதேசப் பித்தை விட்டொழி. 52

உருவம், அருவம், அருவுருவமென வந்த தோற்றத்தை உனது பருவகால ஆராய்ச்சியிலிருந்து கண்டுபிடித்து மருவற்ற உனது சற்குணம் மாசுற்று மங்காமலும் பாதுகாப்பாற்றிக்கொள். இவை யுனக் கரிய நன்மதியாகும். 53

நீ, இவ்வுலகில் உடலவதாரமெடுத்து மக்களுக்கெதிர்காலத்தில் நீதி வழுவாது தொண்டுபுரிய என்னென்ன திட்டமிட்டிருக்கின்றாய், அத்திட்டங்கள் நிறைவேறுமா, நாடும், அரசுமதை ஆமோதிக்குமா? அவ்வாறாயின், புண்ணிய போகத்திற்கேகும் நல்வழிகளைப் புகழ்பெறுமாறு உலகிற்குத் தந்து உதவு. 54

உண்மைப் பொருளை யுணர்ந்தவர் சொல்லார், சொன்னவர் உணர்ந்திராரென்பது உனது வேதாந்தமா, அல்லது இவ்வுலகச் சித்தாந்தமா? சொல்லும் செயலுமமைந்த உத்தமர்களுக்கிவை பொருந்துமா? எதையும் யோசித்துணர்ந்து பேசு. 55

ஏ நெஞ்சே! தலையை மழுங்கச் சிரைப்பதா ? சடையைத் திரித்து வளர்ப்பதாவெனக் கருதல் தவறு. இரண்டுமொன்றுதானென்பது நமது நோக்கம். சிகையலங்காரம் செய்த காலமும் கடந்துவிட்டது. சிங்கார உலகம் சின்னபின்னப்பட்டுழல்வதையும் காண முயலு. 56

கிளைகளடர்ந்த மரங்களுக்கும், கீழே படர்ந்துள்ள செடிகளுக்கும் காற்றால் விளையும் கஷ்டங்களைக் கண்டுபிடித்து அகங்கார விருட்சம் அடிவேரோடு சாயுமென்பதையுமுணர்ந்து, உடலோடு உள்ளமும் ஒடுங்கி உலவப் பழகு. 57

கடவுளடி சேரக் கருதிக் காய் கனியருந்தி உயர் தவம் புரிந்த உத்தமர்களையும்கூட, கீழே இடறி வீழ்ச்சியுறுமாறு சூழ்ச்சி செய்வதுனக்குத் தருமந்தானா? தவத்தை அபத்தமாக்கிப் பவத்தைப் பரவச் செய்யாதிருக்குமாறு வேண்டுகின்றோம். 58

சிறந்த உனது உடலை சதா இறந்துபோனதாகக் கருதி தனுகரண போக பாக்கியங்களையும் துறந்து உனதுயரிய நிலையில் நீயாக நின்று விளையாடியும் வீணான பூமிக்கு ஏன் இறங்கிவர விரும்புகின்றாய் ? உனது ராஜ குஹ்ய யோக வித்தையின் குறைவா, அல்லது ஊழ்வினை வசத்தின் தொடர்பா ? உணர்ச்சியோடுற்றுக் கவனித்து உண்மைத் தெளிவைப் பற்றி நில். 59

பகிரங்கமாகச் சதா பகற்கொள்ளையடிப்பவர்களுக்கும், அந்தரங்கமாக ஓர் தினம் அரிசி திருடினவர்களுக்கும், சித்த விருத்தியில் வித்தியாசமின்றி ஒன்றேயாகும். ஆகையால் எதிலுமுனது கருத்தைப் பதித்து சத்துவகுணப் பிரகாசமாகத் திகழ். 60

மனமே! வெட்டவெளியில் நிட்டை பழகினால், அட்டமா சித்துக்களும் விளையாடலாமென உனக்கு நன்கு தெரியுமல்லவா ? முத்திக்கும், சித்துக்கும் முரண்பாடுண்டெனக் கருதிப் பாவச் சுமையைத் தருகிற கோபக் கொடியனை யடக்கி யொடுக்கினால் பொறுமை பெருகும். 61

இச்சா சக்தியும் கிரியா சக்தியும் ஞான சக்திக்குள்ளடங்க வேண்டுவதிருக்கச் சில வேளைகளில் நீ மாயாசக்தியினிடம் மாட்டிக்கொள்ளலாகுமா ? உன்னிடம் திடசக்திக்கிடமில்லாதபடியால் சலனமதி யுன்னைச் சூழ்ந்துகொள்கின்றது. சீ, இவை பெரிய வெட்கக்கேடு, உணர்ச்சியோடிரு. 62

குப்பானிவலசைக் குயவன் குடிபுகுந்துள்ள இப் பஞ்சபூத வீடு கொஞ்ச நாளில் மறைந்துபோகுமே" யென எண்ணி ஏங்கிக் கண்ணீர் பெருக்கி அறிவாகிய தேவனைத் தொழுது அழியாத நிலையை யணுகிப் பற்றற்றிரு! 63

நெஞ்சே! லட்சுமி பிச்சை யெடுக்கப் புகுந்த இக் காலத்தில் பிறந்த இளைஞர்களிடம் மதபேதமும் மற்கடக மதியுமுயர்ந்து எச்சமயத்தையும் துச்சமாக மதித்து மடிந்து போவதற்குக் காரணமாக நிற்பதும் நீதானல்லவா? ஆகையால், நீ ஒடுங்கினால் இந் நிலவுலக நிஷ்டூரங்களும் ஒடுங்குவதுறுதி! 64

மாணவரும் குருவும் மானிட வடிவில் ஒருருவமாகத் தோற்றமளிக்கையில், குருபிரானை அவதார புருஷரெனப் புகழ்வது எவ்வாறு பொருந்தும்? அதற்கவரிடம் அடையாளங்களேதேனுமுண்டா? அருவுருவ மறைவுத் திரையைக் கிழித்துப் பார்த்தவரிடம் உறவு பூணு. 65

உயிரைச் சிங்காரித்து உண்மை பின்பற்றி வாழ்வதிருக்க, உடலைச் சிங்காரித்து உலகில் புகழ்பெற விரும்பலாமா? புகழ் இகழாக முடியுமெனக் கடிந்து நன்னிலையறிந்து நின் கடனாற்றல் நன்று. 66

அறநெறி யறிந்த பெரியோயென உனக்குப் புகழ் மாலை சூடி, வாகனங்களிலேற்றி ஊர்வலஞ் சுற்றிப் பேரிகை முழக்கிக் கொண்டாடப் புவியோர் விரும்பினால், சம்மதிக்காமல் மறுத்துச் சங்கடப்பட உனக்குச் சக்தியுண்டா? அவ்வாறாயின், அனந்த ஜீவராசிகளின் அகக் கோவிலில் நீ எழுந்தருளலாம். 67

இதயகலசத்திலிருந்து உதயமாகிவரும் மணிமொழி களைக் கேட்டுச் சிந்தித்து ஆனந்த முறுவதுதான் நலமென நாமுனக்கிட்ட கட்டளை. இவை தவிர்த்து, அறிவொளி மங்கிய ஆசாமிகளிடம் வாதுபுரிய முற்படாதே! சமயங் கண்டு அனைத்தையும் ஆமெனக் கேட்டு அடக்கமாகஇரு. 68

ஜீவன் முக்தரும், ஜெகப் பித்தரும், ஜெகஜாலச் சித்தரும் உலவுகின்ற இந் நிகழ்காலத்தில் முக்தி நிலங்கண்டு சித்தந் தெளிவதென்றால் சாத்தியமன்று! உருவத்தைக்கண்டு உள்ளத்தை யுணராமல் நீ, உண்மையை உபதேசிப்பது தப் பிதமாக முடியும். 69

மனமே! நீ, அறியாத காலத்தில் உண்டு ருசிகண்ட பதார்த்தங்களைக் கிடையாத இக்காலத்தில் எண்ணி ஏங்க லாமா? இன்பந் தருவதெல்லாம் இறுதியில் துன்பமயமாகு மெனக் கருதி இச்சையற்று இறைவனருளை நாடிப் பாடுபடு. 70

நீ, குடிபுகுந்துள்ள உடலும், உடல் குடிபுகுந்த வீடும், வீடுகள் செறிந்த நாடும், காடாக முடிகிற காலம் வந் தால், யாவும் குட்டிச்சுவருக்கு நிகராக ஒப்பிடவேண்டி நேரிடும். எவ்வாறெனில், இடிந்து விழுந்த வீடுகளுக் கெதிர் மறையாக உனது வீடு இம்மாய உலகில் இடிந்து விழுந் தறுவாயிலிருக்கின்றது. கொஞ்ச நாளில் இடிந்து விழவும் போகின்றது. ஏமாந்திருப்பதுனக் கழகன்று. 71

கலையிராறையும் கட்டுப்படுத்திக் கண்ணோடு கருத்தைச் சேர்த்து வாழ்க்கை நலனறிய வகை யறிவித்த குரு பகவனை இறையவதாரமென மதித்து, உன தங்க சேட்டைகளையும் ஒப்படைத்து, ஆனந்த உலக அதிகாரியாக அமர்ந்திரு. 72

ரகசியக் கண் திறந்து பார்க்கும்போதுதான் உனது அந்தகாரம் சிறிது வெளிப்படையாகக் காணக் கிடக்கின்றதெனக் கண்டறிந்துள்ளோம். நீ ஓடியொளித்து உள்ளதை மறைக்கக் கருதினுல், பொல்லாத சாபத்திற் காளாகுவாய். நீ தப்பிப் பிழைக்கவேண்டின் நம்மிடம் சரணடைய வேண்டியதே முடிவு. 73

பவம்புரியாத நாமேன் தவம்புரிய வேண்டுமெனக் கருதலாகாது, அறுசுவை யுணவுகளையுண்டு அழகான உடைகளையுடுத்தி உல்லாச நடை நடந்த காலத்தில் கண்ட கனவாகவே முடியும், திண்டுமுண்டு செய்யாமல் அகமசையாத அருந்தவம் செய்தருள்சேர விழை. 74

விரோதி வருடம், ஆடி மாதம் பத்தாந்தேதி அமாவாசையநாள் நள்ளிரவில், நாம் கண்ட தரிசனம் இறுதியில் மெய்யாகவே முடியும். சத்திய ஞான வீர புருடர்கள் அசத்தியக் கருவிலுதித்த சண்டாளர்களை வெட்டி வீழ்த்தக் கண்டேன்! வருங்காலப் படலத்தில் இவை உனக்கு ஞாபகமிருக்கட்டும். 75

அழியாச் சுடரொளி மண்டபத்துள் உன்னைச் செல்லவிடாமல் வெளியே தள்ளுவது உனது அச்சமல்லவா? அந்தரங்கக் கடலில் நீந்துவதெவர்க்கும் எளிதாகாது. கோழை மனதாகிய நீ, நமது உபதேசவழி நின்றுறுதி பெற்றால், பரி பூரணமாகப் பொன்னுலக வாழ்வெய்தப் பெறலாம்! 76

உச்சிவழி சென்று உயரப் பறந்து சச்சிதானந்தப் பரவெளியில் விளையாட அன்னை ஜெகன்மாதா உன்னையழைக் கும்போது, போராடித் திரும்பியது உன்மீது பெரிய குற்ற மாகும். நீ, மறுமுறையும் அவ்வாறு செய்யேனென உறுதி செய்துகொள்ளக்கடவாயாக! 77

ஆயிரவருடம் அருந்தவம் புரியினும் அநித்திய உலக சூழ் நிலையில் புகுந்த மக்களைத் திருத்தியமைக்க உன் னுலாகுமா? பிரயத்தனம் செய்து பார்க்கின்றாயே, பயனேது முண்டா? இனித் தன்னறிவிலே தானாகி நின்றால் நலனுற லாம். 78

மனமே! சாத்திரச் சுவடிகளைப் புரட்டிப் பார்த்து உனதிரு கண்களும் பூத்துபோயினவே. சிறிதேனும் நிம்மதி யாக இருக்கலாகாதா? கதை புராணங்களை வாசித்துக் காலங் கடத்த வேண்டாம்! கதா காலட்சேபங்களைச் சொல்லி வயிறு வளர்ப்பதினால் உனக் கென்ன பெருமை யுண்டு? அனுபவ மொழிகளைப் பயன்படக் கூறுதல் நன்று. 79

ஓடியலைந்து வாடிவதங்கி ஒருநாள் அழிந்து போவது தானே உனது புவி வாழ்வு? இதற்குள் ஏன் பல குதர்க்க வாதங்கள் புரிகின்றாய்? இனித் தனக்கு நிகரில்லை யென்ற அகங்கார வேக மொடுங்கி, மரண தியானத்தையும் மறவா திருக்கவேண்டுவ தவசியமாகும். 80

ஏ மாய்கைப் பிரபஞ்ச நெஞ்சே! அறிவுப் பிரகாசம் பொருந்திய இடமே உனதிருப்பிடமெனச் சுட்டிக் காட்டியும் நீ யின்னும் பிறவிக் குழியில் வீழ்ந்து புரளக் கருதலாமா? மார்க்கமறிந்து கரையேற வழியறியாமல் மேலும் மயங்கி விடாதே. 81

மனிதாம்சமுடைய ஒரு சிலர் தெய்வாம்சமாக மாறிப் பரமபதமடைந்ததுபோல, ஊழ்வினை வசமும் ஒருங் கமைந்திருப்பின் உனக்கும் அந்தத் தெய்வீகத் திருச்சபை யில் இடமுண்டெனக் கூறி நாமுன்னை வாழ்த்துகின்றோம்! 82

உண்ணவேண்டும், உறங்கவேண்டுமென நாள் தோறும் துன்புறுத்திவந்த உன்னைச் சதா சமாதானஞ் செய் தும் கேளாதபடியால், இதற்கு மருந்து எங்கிருக்கெனக் கண்டாராய்ந்து உனக்கு மருந்து உன்னுள்ளேதா னெனத் தெரிந்து, உன்னை உனது சிறைச்சாலையுள்ளே தள்ளியுள் ளோம் இனிச் சும்மா உறங்கு. 83

நெஞ்சே! உன்னைச் சிறைச்சாலையுள் தள்ளிய காலத்திலுங்கூட, நம்மை நீ ஏமாற்றிய கதையொன்றுளது. அதையுமிங்கு பகிரங்கமாகச் சொல்லிவிடுகிறோம். தனித்திருந்து தவம் செய்யலாமெனத் தூண்டிப் பாசறை கட்டித் தருமாறு ஒருவரிடம் பிச்சை கேட்கச் செய்துவிட்டாய். இவையுந்து நயவஞ்சகச் செயலென நாமறிவோம். நீ, தங்கு மிடங்களை எல்லாம் தவச்சாலையாகக் கருது. 84

காலை முதல் மாலைவரை கடமை புரிந்து ஜடம் கஷ்டமுறுகின்றதென நம்மிடம் சொல்வது தவறுதலாகும். "கடமை" என்றதின் உட்பொருளை நன்குணர்ந்து மண் பதைகளுக்கு தக்க பணியாற்றல் வேண்டும். 85

மாந்திரக்கோலும் மகடிக் குழலுமுடையவன் புரியும் அவித்தைக்கும், பிரமவித்தைக்கும் வித்தியாசங்கள் வெகுவாக உண்டென உணர்ந்து, உனக்குயரிய சாகச வித்தையாகிய சைதன்ய உண்மையு முணர்த்தியுள்ள ஆசானைப் பணிந்து தொண்டாற்றி, அறிவுக் களஞ்சியத்தின் திறவுகோலையும் கைவிடாமல் உஷாராக வசிக்கப் பழகு. 86

நிலம் நாட ஜெனித்த உடலை நாசமுறச் செய்கிற உனக்கொரு ஊரேது ? உனக்கிந்த நானிலத்தில் நல்ல பெயர் தானேது? குவலய வாழ்க்கையில் சுதந்திரந்தானேது? இருக்க யிடமற்ற நீ, எண்ணுவதெல்லாம் வீணாகவே முடியும். 87

அரிசியைப்பற்றிய தவிடுப்போல நீ, ஆன்மாவை பற்றியகலாதிருந்தும், ஆனந்த வீட்டின் மேன்மாடியிலேறும் போதெல்லாம் உனதான்ம நண்பனைக் காலே வாரி விடுகின்றாயே, இவை யுனது கெடுமதிக்குணமல்லவா? இனியேனும் ஒன்றுகலந்து உறுதுணையாக இருக்க வேண்டும். 88

முக்குணப் போராட்டத்தினூடே சதா சிக்கியுழன்று பக்குவ நிலைக்கு வராதவரை உன்னிடம், சாந்தசக்தி எவ்வாறு நிலவும்? அரிய தவஞ் செய்து எங்ஙனம் ஜெயமுறுவாய். சிந்தித்துப் பார். சித்தம் தெளியும். 89

ஜீவான்ம சக்தியுடைய மனிதன் பரமான்ம நிலைக்குயரவே பிரயத்தனஞ் செய்கின்றான். விளைபயிர் கொல்லும் கறையான் புழுப்போன்று நமனுருவாகிய நீயே அவன்தவத்தை அழிக்கின்றாய். உனக்கிது நியாயந்தானா? நாள்தோறும் நன்மையை நாசமாக்காதே. 90

ஞானசூன்ய உலகைச் சமப்படுத்திச் சன்மார்க்கமுணர்த்தக் கருதிய நாதாக்கள், இமையா விழிகொண்டுன்னை அடக்கினார்கள். அவ்வாறு நாமும் ஞான நயனத்தால் கட்டி உலகப் பிரளய வெளியில் உன்னை உருட்டிவிடுவோம். அந்திய காலம் நெருங்கிய ஒருவனுக்கு உதயாதி யுண்மையை உபதேசிப்பது போன்றிருந்துவிடாதே. சொன்னோம். 91

நன்று தீதிரண்டிலும் நடு நிலையாக நிற்க வேண்டு மென உன்னை வற்புறுத்தி வழி பல புகலுகின்றோம். இதி லிருந்தரிய உண்மைகளைக் கண்டுறவாடுவது உனது கடனும் உலக நன்மையுமாகும்! 92

எல்லாம் வல்ல ஆண்டவன் ஒருவனுண்டென, உலக மக்கள் பிதற்றிப் பெருமை பேசி, பேரறிவை யிழந்துவிடுவது போல, நீயும் அவ்வாறுரைத்துக் கெட்டழியாமல், அடக்கத் தோடிருந்து அப்பன் திருவடியைப் பற்றிப் பிடி. 93

நீயென்ன அரிவாள் மனையின் கூர்மையா? காய் களை நறுக்கும்போது அது தன்னையொரு சைவாம்சக் கொல் லன் பட்டறை இரும்பாகவும், மாமிசத் துண்டங்களை வெட் டும்போது ஒரு போர் வீரனின் உறைவாளாகவும் கருதுகிற உதாரணம்போல, அடிக்கொருமுறை உனது மதியை மாறுட் டச் சடாமுனியனிடம் ஒப்படைக்கின்றாயே, இது உனக் குப் புகழ் தராது. 94

மனமே! எவை எப்படியானாலும் உனது ஞான திருஷ்டியைப் பரமண்டலமுழுதும் பரப்பிப்பார்த்துக் கொண் டிருவென திரிபுடைப் பூட்டைத் திறந்து ஜோதி நிழலையறி வித்துச் சக்தி பெற்றிருக்கச் சொன்னோமே, அதைவிட்டு எதை எட்டிப் பார்க்கின்றாய்? இது உனது மழலைமதியா? மேலேநில் மேன்மையுறலாம். கீழிறங்காதே. 95

உண்டு உமிழ்ந்த தாம்பூலத்திற்கும் உலக லௌகிக வியவகாரத்திற்கும் மாறுபாடுகள் யாதும் கிடையாது. இகத்தி லுடலும், பரத்தி லுயிருமாக இருப்பதுதான் உனக் குயரிய மேன்மை தருமெனக் கண்டு அமைதியுறு. 96

இகபர வாழ்க்கையில் பற்றற்று இறைவனருளை நாட வேண்டுமென்ற நோக்கத்தை, உனது நுண்ணறிவாலாராய்ந்து, கக்கலை நக்கும் கடைபோலென்றும் உழல்நிலையை தொட்டுத் திண்டாடாமல் நாம் சொல்லாமல் சொன்ன நிலையில் நீ நில்லாமல் நிற்கப் பழகவேண்டும். 97

புவியிலிருந்து பொன்னெடுக்கப்படுவது உண்மை யெனினும் பொன்னை மண்ணெனக் கருதுகிறவர்கள் எவரு முண்டா? நீயேனும், ஆசையிலிருந்து மோச முதிப்பதெனக் கண்டு அவாவை யுனக் கடிமையாக்கு 98

இவ்வுருவ உலகில் உடலவதாரமெடுத்து கடமை புரிவதற்குரிய பண்புள்ள மூன்று அவயவங்களின் உன்னத முடிவை ஆராய்ந்துணர்வது உனக் கவசியம். கரப் பண்பும், மொழிப் பண்பும், வழிப்பண்பும் ஒன்றுபட்டு நாமிட்ட கட்டளைகளிலிருந்தும் தவறாது நடந்தால் எவையும் நலமாகக் காணப்பெறுவாய். 99

ஆதியும் ஜோதியுமெனச் சொல்லித் திரிவதினால் பயனொன்றில்லை. நீ, பேதாபேதமகற்றி யாவும் நீதானெனக் காணும் காலமெதுவோ அதுதான் உனது காலமெனக் காதி லோதி ஊதினதைக் காற்றிற் பறந்தோடச்செய்துவிடாதே. இதோபதேசமிது போதாதா ? 100

நீ, என்ன தொட்டாச் சிணுங்கியா ? கவனக்கண் உன்னிட மிருக்கையில் உனது விசுவரூபத்தைக் காணுமே. சிறிதகன்றால் அதிகாரத்தோரணை விருத்தியாகின்றதே. சீ கழுதை! உனக்குப் பழுதையெனப் பெயரிட்டதும் குற்ற மில்லை. 101

மலர்ந்த முகமும், குளிர்ந்த பார்வையும் திறந்த ஞானமும் சிறந்த சொல்லும், பரந்த நோக்கமும், உன்னை யகலாதிருக்கவேண்டுமென உபதேசித்தோமே ? அதை தழுவி நடவாவிடில் நீ, ஞானப்படியிலிருந்து கீழே நழுவி விழுந்து பல தொல்லைகளை அனுபவிக்க நேரிடும். ஆகையால், ஜாக்கிர தைப்படி பற்றிச்செல். 102

மனமே! நீ துக்கசாகரச் சாக்கடையில் புரண்டு துன்புற்ற நாள் போதாதா ? அதிலுற்ற ஆதாயமாகிய பிற விச்சுமைகள் உனது பிடரிக்கு வெகு பாரமாகத் தோன்ற வில்லையா ? ஆனால், ஆழ்ந்தெதையும் செய்யத் துணிவுகொள். 103

நாடோடியாகத் திரிந்தலையினும் காடுமலைகளில் ஏறி இறங்கினும், பொந்து புடவுகளில் குந்தியிருப்பினும் உனது அகங்காரமும் அறியாமையும் நீங்கிவிடுமா? சாந்த மலைபோ லுனக்குச் சமதரிசனம் கிட்டாதவரை எவையு முனக்குப் பலிதமாக மாட்டா. 104

உன்னை நமது செல்வச் சிநேகிதனைக் கருதியே சிறந்த சன்மார்க்கங்களையும், எதிர்மறை மரண சிந்தனையை யும், உபதேசித்து வருகின்றோம். உனது கற்பனை சக்தியைக் கொண்டுமேலும் விரிவுறச்செய்து வீடுபெற வேண்டுவதிருக்க, குடத்தினுள்ளேற்றிய விளக்கைப் போன்றிருந்துவிடாதே. 105

நாம், மரண மலரெடுத்து மாலைகட்டி அரனருள் தேவிக்கு அற்பணித்துத் திட உறுதியுற உனக்குச் சாற்று கின்றோம். ஏற்றின்புற்று இமையாத நாட்டத்தைப் பெற் றுய்வாயாக. 106

மனமே! உனக் கடிமைகளாகியிருந்து வாழ்ந்தவர் களுடைய திருநாமமே, இந்நானிலத்திலும் கிடையாது போயின. உன்னை அடிமையாக்கிய உத்தமர்களின் பெயர் பொய்யாமலென்றும் ஓங்கிப் பிரகாசிக்கின்றது. ஆதலால், நாம் சொன்ன வழிபற்றி நற்பெயரெடுக்க முற்படு. 107

அளவுகடந்த இயற்கையமைப்பைக் கண்ணுற்றுக் களிப்படையவும், அவனியில் ஆவனவற்றைச் செய்து ஜெயம் பெறவும் ஜெனனமெடுத்த மனிதன், உன்னை வசமாக்காவிடில் உலகில் வீரப்பிரதாபனாகத் திகழமுடியாது போகும். 108

எள்ளத்தனையும் பற்றின்றி உள்ளத் துறவுகொண்ட உத்தம ஞான உலக உதாரணச் சிங்கங்களை நீ, ஏமாற்றமுடிந்ததா? அவர்களை யாரென நீ சிந்திக்குமுன் நாமே உனக்கறிவிக்கின்றோம், சிறிது செவி யுற்றுக் கேள். 109

கடமையிற் சிறந்த கரும யோகத்தைக் கண்ணிமையெனக் கருதி முடித்த, பாரதபுவிக்கதிபதி அசோகனும், மேல்நாட்டு ரோமாபுரிக்கதிபன் மார்க்ஸ் ஹரேலியன், இயேசு தேவன், நபிநாயகம், விவேகாநந்தன், அருள் இராமலிங்கமும்போன்ற தவச் சுவாலையோங்கிய பெரியார்களின் காலடியிலே நீ, பெட்டிப் பாம்பைப்போல சுருண்டு கிடந்ததை மறந்தாவிட்டாய்? மறப்பதுனக்கு மான்பன்று. 110

சிற்றின்ப வாழ்க்கையை விரும்பிய சிறுமதியாளர்களை நீ சீரழிப்பதுபோன்று எல்லாரிடமும் உனது ஏமாற்று வித்தைகள் செல்லுபடியாகுமா? கோடிக் கொருவரேனும் உனது குடலைப் பிடுங்கி மாலை சூடி அரியதவம் புரிவார்களென்பதைத்தான் இங்குனக் கெச்சரிக்கின்றோம். ஆனபடியால், எதிர்காலப் புகழோங்க நமது நன்மொழிகளைக் கேள், நலனுறலாம். 111

நெல்லை அரிசியாக்கியும், அரிசியை மாவாக்கியும், தந்து உதவிய குந்தாணிக்கு வந்ததல்லவா நாசகாலம். தனக்கு நிகரில்லையென இறுமாந்திருந்த குற்றமே அதற்கிடையூறாகி விட்டது, இது நன்குணர்ந்து நீ அகங்காரமற்றிருத்தல் நன்று. 112

நெஞ்சமே! உனக்குக் கொடைவள்ளலென்ற பட்டப்பெயரிட்டழைக்கின்றதின் காரணம் யாது? எண்ணிக் கொடாமல் காசு பணங்களை அள்ளிக்கொடுப்பதினாலா? அல்லது அருள்மொழிகளான திருஉரைகளை மக்கட்குச் சொல்லித்தருவதினாலா? மேதாவியென்ற பட்டத்தில் மயங்கினோர்கள் மூதேவிக் கடிமையாகியுள்ளார்கள். இவை வெகுநாள் நிலைநில்லாதெனக் காண்பாயாக. 113

நெஞ்சே! மத்திய வானத்திலுயர்ந்தது சூரியன், உத்தியோகப் பிரகாசத்திற் சிறந்தவன் மனிதன். அவ்வாறிருந்தும் சத்தியந்தவறி நடக்குமாறு நீயவனைத் தூண்டுவதினாலல்லவா புத்திமத்திபக் குணமுடைய மடையனென இப்புவியில் இகழப்படுகின்றான்! 114

பூத்துமலர்ந் துதிரும் புட்பங்களைக் காட்டிலும் சிறந்தது உள்ளத்திலூறிய அன்பு, சாஸ்திர சன்மார்க்கங்களில் உணர்வுடையவன் மனிதன். ஆனாலவனுக்கு ஆத்திரமூட்டி அவசர புத்தியால் அடாது செய்ய நீ தூண்டி இடையூறுகளுக் காளாக்குவதினால் அவனியில் அவன் ஆகாதவனெனக் கருதப்படுகிறான். 115

அணி மணியிலுயர்ந்தது ஆடை இனிய மொழிகளை உரையாடுவதிற் சிறந்தவன் மனிதன். அவனைக்கடுமொழி புகழ நீதூண்டுகிறபடியால், படுபாவியெனப் பெரியோர்களால் கடிந்து அவமதிக்கப்படுகின்றான். 116

மதிப்பிலுயர்ந்தது மாணிக்கம், மகத்துவ சக்தியி லுயர்ந்தவன் மனிதன். அவனை மானபிமான மிழக்கும் படியாக சதா நீ செய்கின்ற யடியால். மனிதப்பதரெனத் தூற்றி மதிப் பையுமிழந்து தவித்துழல்கின்றான். 117

பொறுமையிற் பெரியது பூமி, புத்தி சாதுரியத்தில் சிறந்தவன் மனிதன். அவனைத் தரும நெறி தவறி நடக்குமாறு நீ, இச்சை மயமாகி இழுக்கப்படுவதால் கண் மூடிக்கயவ னெனப் பேரறிவுடையோர்களால் அவன் பேசப்படுகின்றான். 118

சுறுசுறுப்பிலுயர்ந்தது சிற்றெறும்பு, சுக ஜீவனஞ் செய்வதிற்குரியவன் மனிதன். ஆனாலவன், ஆபாசமாக பிச்சை யெடுத்து அலையுமாறு நீ செய்கிற சூழ்ச்சியால். பிரயோசன மற்ற சோம்பேரியெனக்கடிந்து தூற்றப் படுகின்றான். 119

மனமே! ஆனபடியால், இனிமேலேனும் பேரறிவுற்ற மனிதனை சிற்றின்பச் செய்கைகளுக்கு ஏவிச் சீறழியாத வண் ணம் மனிதாம்ச நேர்மைக்குத் தக்கவாறு நீ உறு துணையாக நிற்க வேண்டுமென நாமுன்னை எச்சரிக்கின்றோம். 120

நாம் உனக்கொரு உயரிய ஆலோசனை கூற விரும்பு கின்றோம். செவியுற்றுக் கேட்டுச் சிந்தித்து அதன்படி நடக்க முற்படுவாயானால், கவலையாகிய காலனின்றி உனது வாழ்நாளை வெகு களிப்புடன் நடத்தி வரலாம். 121

அவ்வையாதெனில், நித்திய கண்டமாகிய உடல்தான் செத்தும், பிழைத்தும் சீரழிவதே யல்லாது உணர் வுருவாகிய உள் மனிதன் பிறப்பதுமில்லை சாவதுமில்லை. அவன், நித் திய ஜோதியாகப் புவியில் பரவி நிறைந்து நின்றுகொண்டிருக் கின்றான் கண்டு கலந்திரு. நன்று தீதென்பது அங்கொன்று மில்லை. 122

உன்னை யுணர்ந்து உயர் நிலை நின்று வெண்ணெய் போலுனது உள்ளம் இளகி உருக வெண்டாமா? நீ, என்ன கருங்கல்லாலாக்கிய கடினபீடமா? அடாது செய்வதை யொழித்து அன்புமயமாக உலவு. 123

திரிலோக சஞ்சாரி போன்ற நீ இந்த ஹிதோபதே சமெல்லாம் யாருக்கோ வென்றெண்ணி பாராமுகமாக இருக் கின்றாயா? அல்லது, செவியுற்றுக் கேட்டுத்தெளிகின்றாயா? ஏனிவ்வளவு பிரயாசையோடு உனக்கு நல்வழி புகட்டுகின்றே மெனத்தெரியுமா? உலகமறதியாகிய மரண சிந்தனை உனது மூலமாகவேயாயினும், பிரகாசிக்கட்டுமென்று குறித்தேயாம் 124

மனமே! நீங்கள் எத்தனை பேர்வழிகள்தான் கூட்டாளிகள்? காமன் உனக்கு மூத்தவனா? சின்னவனாகிய உன்னைத் தலைவனாக்கி நீங்கள் பத்துப்பேர்களல்லவா ஒத்துக்களவு செய்கிறீர்கள். உங்களில் ஒருவரையும் விடாமல் ஓமாக்கினியில் தள்ளிப் புதையாவிடில் அரிய தவம் புரிய முடியாது. 125

குழந்தை பிறந்தால் கொண்டாடி மகிழ்வதும், இறந்த பிணத்தைக் கட்டியழுவதும் ஏனென இதுவரை நீ ஆராய்ந்ததுண்டா? அழுபவர் சிரிப்பரென்பது உனக்கு அனுபவமல்லவா? சுக துக்கத்தாலாகிய உலகிலிருந்து தனக்கு நிகரில்லை யெனத்துள்ளலாமா? உனக்குமொரு பாடைப்பல்லக்குண்டென்பதை மறந்து விடாதே. 126

அங்கத்துள் தங்கமாகத் திகழும் அழியாத உன்னை நீ மறக்கலாமா? மறந்து தினந்தோறும் திருவிளையாடல் புரிந்ததும் போதாதா. போனதெல்லாம் போகட்டும் இனியேனும் மௌன மணியாக இருக்கப்பழகு. 127

இரசாயன முறையில் தயாரிக்கப்பெற்ற உப்புக்குடுக்கைகள் விசேஷமாக வீடுகள் தோறும் இருக்க வேண்டுமெனக் கருவூர் கவர்ண்மெண்டிலிருந்து கட்டாயச்சட்டம் பிறப்பித்துள்ளார்களே. அதை நீ அறிய வில்லையா? அதற்கு நீ கட்டுப்படலாமா? அப்படியாயின் சுதேசக்குடுக்கைக்கு வந்தது நாசகாலம். 128

கற்பக விருட்சத்தின் பூவாயிருந்து பிஞ்சாய் வெடித்து, காயாகத்திரண்டு கனியாய்க்கனிந்து சுவையூறிநின்ற வகையுணர்ந்தால், நீ, நாமே, அறிவு மயமெனக்காணலாம், தன்னிலையை விட்டுத்தடுமாறாமல் உயரிய நிலையில் நிற்பாயாக. 129

உனதுள் உதராக்கினி, காமாக்கினி, கோபாக்கினி என மூன்று அக்கினிகள் கூடி உன்னை வடவாமுகாக்கினி போன்று துன்புறுத்துகின்றன. அதை அணைப்பதற்கேதேனும் உபாயதந்திரம் கற்றிருக்கின்றாயா? இல்லையேல், பல தொல்லைகளைத் தந்தவண்ணமாகவே இருக்கும். அபாயம் வருமுன் அதிசாக்கிரதையாகக் கவனித்தல் நலம். 130

நெஞ்சே! அசத்தை யுட்கொண்டு அநித்தியவழியைப் பின்பற்றுவதெனக் கருதிவிடாமல். சத்தையுட்கொண்டு, நித்தியவிதியைப் பின்பற்றுவதென நினைவிலிறுத்தி உன்னையும், உனக்காதாரமாகிய வஸ்துவையும் அறிந்துஉன் பிறவிப் பிணியைப் போக்கப் பிரயத்தனப்படு. 131

கங்கை, யமுனை, காவேரி, சிந்து போன்ற நதிகளில் மூழ்கக் கருதிய உன்னைத் தடுத்து நிறுத்தி. உனதுள்ளிருந்து ஊறிப் பொசிந்து பொங்கி வழியும் ஆனந்தநதியில் மூழ்கென நாமுனக்கு உபதேசித்தோமே, அவ்வாறு நீ ஒழுகிவரின், அகக்கண் திறந்து அருள் செறிந்தோங்கி அண்டமும் பிண்டமும் ஒன்றாக நின்று பிரகாசிக்குமே! 132

உன்னைவிட் டென்றும் பிரியாத ஆன்மலோகத் துணைவர்கள் யார் தெரியுமா? உனது ஆரிய பொய்யா மொழியே தாய்; அறிவுத்தெளிவே தந்தை; ஞான ஒளிதான் குரு; நாவின் வன்மையே கலை; தருமமென்பது சகோதரர் ஈகையென்பதே நண்பர்; பொறுமையென்பது புத்திரர்; திட நம்பிக்கைதான் மனைவி; அருள்பிரகாசந்தான் சம்பத்து, ஆனந்தமேயுனது அழியாதவீடு; இவ்வாறுற்ற நிலைதான் இகபரப் பற்றற்ற நிலை. 133

காமக்கரடியும், குரோதப்புலியும், லோபப்பன்றியும் மோகக்குக்கலும், மதவரக்கனும், அச்சப் புதர்களுமடர்ந்த கானகத்திற்குள். அருளாகிய வாகனமேறி, அறிவாகிய ஆயுதம்தாங்கி, குருவாகிய ராஜன் புகுந்து, குணமாகிய வில்லை வளைத்து, நித்யானந்தப் பாணம் தொடுத்து, அநித்தியமான காட்டை அழித்து, ஆசையாகிய விலங்கினங்களை வேட்டையாடி சத்தியவித்தை விதைத்துவருகின்றனே! நீ, இதை உணராமலின்னும் உறங்கலாமா? விழிப்புடனிருந்து உன்னைக் காப்பாற்றிக்கொள். 134

மரணரதமேறி இடுகாடுலகிற்கேகி, பாதாளப்பட்டணத்திற்குச்சென்று, இருட்டுப் பாசறை வீட்டிற்குடிபுகுந்து, மண்மலரென்னும், பஞ்சணையின்மீது உல்லாசமாக மல்லாந்து படுத்து, கண்விழியாமல் தூங்குகிற காலம் நெருங்கிவருவதை உன்து பராமுகப் பார்வையால் கவனிப்பின்றி இருந்துவிடாதே யெனக்கூறுகின்றேன். 135

மனமே! இம்சையகற்றி அஹிம்சை பின்பற்றி வாழப் பிறந்த மனிதர்களை, உணர்வற்ற தீயவழிகளில் திருப்பிக் காருண்யமற்ற கல்நெஞ்ச முடையவர்களாகச் செய்து ஊனுடல் தாங்கிய ஜீவன்களை வதைத்துண்டு வசிக்கவும் நீ தூண்டுகின்றாய்! உனது ஆட்டம் அடங்கினால் கொடிய கொலைச்செயலும் நீங்கிவிடுமென்பது வெளிப்படை. 136

விளையாட்டிற்கு வைக்கின்ற நெருப்பானாலும், வீடு பற்றி எரிந்துபோகுமென்பது உண்மையல்லவா? உள்ளும் புறமும் ஒன்றுபட்டு நீ தெய்வீகத் திருவாக்கைப்பிரயோகிக்க வேண்டியதிருக்க. மெய்மயமாகிய கிளியை பொய்யாகிய பூனையினிடம் ஒப்படைத்துவிடலாகாது! 137

அல்லும் பகலுமாக நாமிருவரும் பொய்யுலக வாழ்விற்குப் போராடிப் புத்திபீனமாகச் செத்து மடியப்போகிற தருணத்தில் நல்ல நிலை கண்டு நாமே, நாமாகினபடியால் இதற்குமுன் தொட்டுத்தொடர்ந்து கூடிவிளையாடிய கெட்ட துட்டச் சகவாசத்தைக் கனவிலும் எட்டிப் பார்த்து விடாதே சொன்னேன்!! 138

சித்தசலனமற்ற சிசுவும், உத்தமநிலையை யடைந்த மஹானும், நன்றுதீது, உயர்வுதாழ்வு களறியாதிருக்கின்ற காரணம். காணவிழைபின் அவர்களின் இதயப் பூஞ்சோலையை விட்டு எழுந்திராமல் நீ ஆனந்தநித்திரை செய்வதையே குறிக்கின்றது. 139

நாமிதுவரை உனது மழலைமதியைப் போக்கி மகத்துவமிக்கப் பேரறிவைப் புகட்டி வருகின்றோம். நீ கேட்டுத் தெளிந்து கிருபைவீடு பெற்றுய்வாயானால் உன்னை அழகிய அரசவடிவிற் சிங்காரித்து, அரியாசனத்திலமர்த்தி, நமது அகங்குளிரப் பார்த்து ஜகஜீவ சிருஷ்டித் தொழிலையும் ஒப்படைத்து அழியாப் புகழெய்தும் உலகிற்கு உன்னை அதிபதியெனவும் முடிசூட்டுவோம்!! 140

ஆஹா! மரண சிந்தனையின் மகத்துவம் அதிவிரைவிலுனது அங்கத்தைப்பற்றித் தேஜசாய் ஜொலிக்கத்தொடங்கிவிட்டதே? காரணம் யாதென யாரறிவர்! கற்றுக்கொடுத்த நாமும், உற்றுக்கேட்டுணர்ந்த நீயும்தானே அறிவோம்! பற்றற்று முற்றும் துறந்த முனிபுங்கவர்களுக்கு அடையாளமிந்த சாம்பவிதேவியின் இமையா நிலையேயாகும். 141

ஏ நெஞ்சே! தரித்திர நாராயணனுக்கு எதிர்பாராத தனப் புதையல் கிடைத்த தன்மைபோன்று உனதறிவுச் சுரங்கத்தின் கதவு திறக்கப்பட்டதைக் காணக்காண வெகு பரமானந்தமே! நாமிருவரும், இனி ஒருவராகி ஏகாக்ர வீட்டில் சைதன்ய வஸ்துவில் குடியிருப்போம்! உறுதி தளராத மனிதனுக்கு இறுதி முடிவான நிலைதான் இம் மரணநிலை. 142

மேற்கூறிய நியதி தழுவி நீ நடப்பாயாகில், உன்னை நமது பரிபூரண கருணாநிதியாகக் கருதி, மனக் குரங்கென்ற பட்டப் பெயரையும் மாற்றி, நம தன்னை மனோன்மணி யென நற்பெயரிட்டு, அன்புமலர்கொண்டர்ச்சித்து, ஆனந்தக் கண்ணீர் சொரிந்து போற்றி என்புருகி இருகரங்கொண் டேற்றித் துதித்து, இதயக்கோவிலில் சதா உன்னை எழுந்தருளச்செய்து பூசிக்கின்றேன். 143

THE MADUR

ஏ மனமே! பரசிவ சக்தி நிறைந்த பரதபுவி படுகளமாக மாறிவருகிற இக்காலத்தைத் தடுத்துநிறுத்த வேண்டின், உனது பேருபகாரமாகிய சாந்தமே தேவைப்படுகிறது. இல்லையேல், சாம்ராஜ்யமாகச் சமாதானம் காணமுடியாது போகுமென்பதை நாமறிவோம். ஆதலால், எவற்றிலும் நீ அமைதியாக இருக்குமாறு மிக மன்றாடிக் கேட்டுக்கொள்கின்றேன்! 144

நமதகத்துள் மங்களமாகத் தங்கிய மனோன்மணியே உனக்கு அடியேன் வணக்கம்!

அமைதி கலையாதிரு!

ஜெயம்.

பொன்மணி விலாஸ் பிரஸ் மதுரை 50.

இந்நூலாசிரியர் இயற்றியருளிய
புத்தகங்கள்

கிடைக்குமிடம்:-

அருளொளி மடாலயம்
அழகன்குளம்
இராமநாதபுர

இ. மா. கோபாலக்கிரு
புத்தகசாலை, ம

அருளொளி ஞான
சங்கிலியாண்ட
செங்குளம் போஸ்டு, தி

பொன்மணி விலாஸ்பிரஸ், மதுரை.